# உதயதாரகை—MORNING STAR.

PUBLISHED AT MANEPY, CEYLON, TWICE EACH MONTH, AT TWO SHILLINGS A YEAR, PAYABLE IN ADVANCE.

௰௨ம். புத்தகம், சஞ்சிகை ௰௩.] [illegible] ஆடி ௴. அ உ. வியாழக்கிழமை.—Thursday, July 8, 1852. [Vol. XII. No. 13.

### TERMS OF THE PAPER.

A single copy 2 shillings a year. Mail subscribers, free of postage, 4 shillings—TO BE PAID IN ADVANCE. If payment is delayed beyond the first quarter, 6 pence extra; beyond the second, or July 1st, 1 shilling. To any one person who will send ADVANCE PAY for 5 copies, we will send the 6th gratis, and at this rate for any number of copies.

Advertisements inserted for 3 shillings a square; less than a square 2 shillings. At this rate they will appear twice, *if the advertiser so request.*

*All notices of deaths and marriages will be chargeable as advertisements.*

Communications must be post paid to receive attention.

The following persons will act as Agents for the Star.

JAFFNA—The Missionaries.
POINT PEDRO, CATTAVELY, } Mr. J. WHITE.
TRINCOMALIE—Rev. E. J. ROBINSON.
COLOMBO—Messrs. P. B. FERNANDO & SON.
KANDY—Mr. L. [illegible]TOS.
TRANQUEBAR—Mr. JEDDIDIAH ADAMS.
BATTICALOE—Rev. J. GILLINGS.
MADURA—Rev. C. F. MUZZY.

[An Address to Educated Young Men.]

சிநேகிதரே,

[illegible]ம் ௵. கார்த்திகை௴. ௩௰ ௨. வட்டுக்கோட்டையில் முதன்முறையாக ஒருமதுபானவிலக்குச் சங்கமேற்படுத்தினவேளையில் இதொருஅற்பன்துவக்கமென்று சிலர்எண்ணினார்கள். அச்சங்கத்துக்கு நானே எழுத்துக்காரியஸ்தனாயிருந்ததினால் சாத்திரப்பள்ளிக்கூடத்திற்பிள்ளைகளில் அனேகர் என்னிடத்தில் வந்து உவாத்திமாராகிய நீங்கள் எங்களை நற்காரியத்திலே முயலவிடாமல் வீண்காரியத்தை ஏன் துவங்கி எங்கள் நேரத்தையும் விருதாவாக்குகிறீர்கள். நாங்களுங் குடிகாரரோ? குடிகாரர் பார்க்கவேண்டிய காரியத்துக்கு எங்களுக்குக்கவலையென்னவென்றார்கள். இவ்விதமாய் அனேகந் தடைகள் இச்சங்கத்துக்கு உண்டுபட்டும் அது நின்றுபோகாமல் இதுவரைக்கும் நிலைநிற்கிறதுமன்றி, அதன்பிறகு யாழ்ப்பாணப்பகுதிகளிலுண்டுபட்ட மதுபானவிலக்குச்சங்கங்களெல்லாவற்றிற்கும் இதே தாய்ச்சங்கமாயிருக்கின்றது.

குடிவெறியை விலக்குகிறதற்கு ஏற்ற அனேகந்துணைக்காரணங்கள் துரைமார்மூலமாகக் கண்டியிலுங் கொழும்பிலுஞ் செய்யப்பட்டுவருகிறதென்பதை எங்கள் சங்கத்தார் கேள்விப்பட்டபொழுது அவ்விதமாய் எங்கள் யாழ்ப்பாணம் முப்பத்திரண்டுகோவிற்பற்றிலும் இந்தக் குடிவெறியை விலக்குகிறதற்கேற்ற வழிவகையாதென்பதை யோசனைபண்ணும்படிக்குப் பிறகிட்ட, ௫௧ ம். ஆண்டு புரட்டாதிமாதம் பதினாருந்தேதி சங்கத்தார்கூடி என்னையும், ஒரு உவாத்தியையும், ஒரு தலைமைக்காரனையும் ஆலோசனைக்காரராக நியமித்தார்கள். எங்கள் நோக்கமும் யோசனையுஞ் சரிவர நிறைவேறும்படிக்குப் பத்து இடங்களை நாங்கள் தெரிந்தெடுத்து அந்தந்த இடங்களுக்குச் சங்கத்தார் சம்மதிப்படி கடதாசியெழுதி எங்கள் முயற்சிக்குக் கூடியளவு தலைமைக்காரர்தானே உதவிசெய்யவேண்டுமென்று அவர்களைக்கேட்டுக்கொண்டோம். ஆனாலுங் கொஞ்சக்காலமாக எங்கள் எண்ணஞ் சித்தியாகாமலிருந்து இப்பொழுது நாங்கள் நியமித்த இடங்களில்மாத்திரமல்ல, மற்றனேக இடங்களிலும் மதுபானவிலக்குச் சங்கங்களேற்படுத்தப்படவும் அனேகர் அச்சங்கக் கட்டளைச்சட்டத்துக்கிணங்கிக் கையொப்பம்வைக்கவும் வந்தது அனேகருக்குப் பெரிய ஆச்சரியம். வட்டுக்கோட்டையிலேபண்ணின அற்பன்துவக்கம் இவ்வளவுசித்தியாகுமென்றொருவரும் முன்னினைத்திருக்கவில்லை.

சாராயங் கள்ளுமுதலிய மஸ்துக்களைக் குடிப்பதினால் வருந் தீமைகளையுங் கேடுகளையும் நட்டங்களையும் கவனிக்கிறதுபோலவே இந்தப் பேயாராதனையினால் உலகத்துக்கு நேரிடும்விக்கினங்களையுந் தாராளமாய்ச் சிந்தித்து இற்றைக்கைந்துவருடத்திற்குள்ளே இந்த யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மதுபானவிலக்குச்சங்கங்களின் வளர்ச்சியையும் பார்ப்பார்களேயானால் அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதிருந்தாலும் மற்றும்படி அவர்கள் கல்வியறிவிலும் நன்னடையிலுந் தேறித் தங்களூரவர்களைச் சிறைகளிலுங் குறைவாக்கின இந்தப் பேயாராதனையையும் மற்றும் பிராமணக்களுடைய புரட்டுக்களையும் சாத்திரிமாருடைய புரளிகளையும் நாசப்படுத்தும்படிக்கு ஒரு சங்கமேற்படுத்தக் கூடுவார்களென்பதற்குச்சந்தேகமில்லை. பிராமணர்கள் தாங்கள் பிழைக்கும்படி கட்டிவைத்த சூட்சங்களெல்லாம் அகப்பட்ட யாவையும் பட்சிக்கிற அக்கினிக்குச்சமானமாயிருக்கின்றனவென்று அநேகம் போதியமனிதர் சொல்ல, நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நெருப்புக்கொருக்காலும் பசிதீருகிறதில்லை. ஏதைக்கொடுத்தாலும் பட்சித்துவிடும். அவ்விதமாய் இந்தப் பிராமணர்களும் கோவில் முகாமைக்காரரும் பெருநாள் திருநாள் முதலிய தருணங்களிற் சனங்களிடம் வாங்குகிற தெட்சணைகளைவிட மற்றும்படி ஒரு பிள்ளைபிறந்தநாள் துவக்கம் அது இறக்கும்வரைக்கும் இறந்ததின்பின்னும் வருஷம்பன்னிரண்டுமாதத்தில் ஒவ்வொருமாதமும் அந்தியேட்டி, மாசியம், திவசமென்று, சனங்களிடத்திற் பொருள் பறித்துக்கொள்ள உபாயமான சூட்சங்களைப் பண்ணிக்கொண்டார்கள். எங்கள் சாதிக்கேன் இந்தவறுமை. எங்கள்சாதியாரேன் ஒருவரையொருவர் நம்புகிறதில்லை. எங்கள்சாதிக்கேன்பரிமாற்றத்தப்பு. எங்கள்சாதிக்கேன் வீரக்குறைச்சல். இவைகளுக்கெல்லாங்காரணம் இங்கே நடக்கும் பேயாராதனையல்லவோ? குடிவெறியினால்வருந் தீமையிலும் பேயாராதனையினால்வருந் தீமையோ பெரிது.

அல்லாமலும் எரிச்சல், பொருமை, கோபம், பழிவாங்குங்குணம், துன்னெறி, அவபத்தி, கற்பழிவு, மானக்கேடு, சுகவீனம் முதலிய இப்படிப்பட்ட காரியங்களுண்டுபடுகிறதற்கு விக்கிரகாராதனைகாரணமல்லவோ? கோவில்கட்டவுந் திருவிழாஎடுக்கவும் எத்தனை ஆயிரம்பணத்தை வீண்செலவுபண்ணுகிறீர்கள். இந்தப் பணத்தை எடுத்து எங்கள் சாதிப்பிள்ளைகளைப் படிப்பித்தால் எத்தனையாயிரம்பேரைப் படிப்பிக்கலாம். எகிப்தியர், பாபிலோனியர், கிரேக்கர், ரோமர் முதலான பூர்வீக சாதியாருடைய சரித்திரங்களைச் சற்றே கவனித்து அத்துடனே எங்கள் சாதியாருக்குள்ளும் நடந்த மாறுதல்களையும், பேயாராதனை வலுக்கொண்டிருக்கிறவிதத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியதாயிருந்தால் கோவில்களையும் பிராமணர் குருக்கள் பண்டாரங்கள் முதலிய வீணர்களையுந் தாபரிக்கும்படி எங்களைப்போல அவர்களொருக்காலும் இவ்வளவு பணத்தையுங் காணிபூமிகளையுந் தருமமாகக்கொடுக்கிறதாக அல்லது கொடுத்ததாகக் காணவில்லை. மேலும், கன்னியாகுமரிதொடங்கி இமயமலையீருகவும், இந்துநதிநின்று பிரமபுத்திரநதிமட்டாகவும் அலங்காரமாய்க் கட்டப்பட்டிருக்குங் கோவில்கள், மண்டபங்கள், மிருகசத்திரங்கள், மற்றுந்திருப்பணிகள் எவ்வளவென்றெண்ணிவைத்துக்கொண்டு, அவைகளைத் தாபரிக்கும்பொருட்டுத் தருமசாதனமாய் விட்ட கமங்களையும் கிராமங்களையும் சுற்றி உலாவிப்பாருங்கள். அல்லாமலுங் கண்களிருந்துங்காணாத, காதுகளிருந்துங் கேளாத, மூக்குகளிருந்தும் முகவாத, கைகளிருந்துந் தடவாத, கால்களிருந்தும் நடவாத விக்கிரகங்களைத் தாபரிக்கும்படிக்கு ஒன்றுமறியாத வறியசனங்கள்பண்ணின தருமத்தினால் எத்தனையிலட்சம் ரூபாவுக்கு வருமானமென்று எந்தப் பிராமணனாதல் கணக்குப்பார்த்ததுண்டா? தன்னைப்போலச் சரிபிறப்பான பிராமணனுடைய கட்டளைகளுக்கும் விதிகளுக்கும் ஒத்திசைந்து நடப்பது எவ்வளவுபைத்தியம்.

பிராமணர்கள் கொலை களவு கட் காமம் முதலிய பஞ்சமாபாதகங்களைச் செய்கிறதைச் சனங்கள் கண்டு கவனித்தாலும் அது வடுவென்றும் அவர்கள் குலத்துக்கிழக்கென்றும் எண்ணிஅவர்களைத்தண்டனம்பண்ணுகிறார்களா? இல்லையே, பின்னை இதிலே ஆர் குற்றவாளிகள், சீஷரோ அல்லது அவர்களுடைய குருக்களோ? அவர்களிருபகுதியாரும் ஒருவர்க்கொருவரிசைந்துதவிசெய்துகண்சாடையாயிருப்பதினாலே இருபகுதியுங் குற்றவாளிகளென்றும் அவர்கள் சமயமுறை முற்றுந் தப்பென்றும் நாங்கள் தீர்மானிக்கிறோம்.

இப்படிப்பட்ட போய்ச்சமயத்தைப் பரிபாலிக்கிறதற்காகவும், பிராமணர் முதலிய பண்டாரங்களைக் கொழுக்கப்பண்ணுகிற இந்த விக்கிரகாராதனையை விருத்திபண்ணுகிறதற்காகவும் எங்கள் உறவர்கள், அயலவர்கள், தங்கள் பணத்தையும் பிரயாசத்தையும் வீணிலே செலவழிக்கிறதைப் புத்திமான்கள் கண்டு அதினாலே நமக்கென்னவென்று மௌனமாயிருப்பது புத்தியுள்ளவர்களுக்கழகா? உணவல்லாத பொருளினிமித்தம் பணத்தையும் திருத்திசெய்யாத பொருளினிமித்தம் உங்கள்பிரயாசப் பலனையும் ஏன்செலவழிக்கிறீர்கள்?

இவ்விடத்திலும் வடதேசத்திலும் கோவிற் பராபரிப்புக்காகத் தருமசாதனமாய் விட்ட கமங்களின்பரப்புக்களை அளந்துபாருங்கள். அதைக் கொடுத்தவர்களுடைய பிள்ளைகுட்டிகள் படும்பாட்டையும் உற்றுப்பாருங்கள். இவர்கள் பிதாக்கள் கோவிலுக்குக்கொடுத்த காணிபூமிகளின் வருமானங்களையெடுத்துப் பிராமணரும் பண்டாரங்களும் வேசிகளுந்தின்று கொழுக்க, அவர்கள் பிள்ளைகளோ உடுக்கத் துணியற்றுத் தின்கச் சோறற்று அலைந்து உலைந்து யாசகம் பண்ணுகிறார்கள். இதை நீங்கள் காணவில்லையா? வேலணை, காரைதீவு, அராலி, சங்கானை, மானிப்பாய், தென்மராட்சிமுதலிய இடங்களிலுள்ள கமங்களைத் திருத்திப் பயிர்செய்தால் அதினவருமானத்தைக்கொண்டெத்தனை எளியகுடி சீவனம்பண்ணலாம். எத்தனை மருந்துச்சாலைகளைக்கட்டி வியாதிக்காரருக்கு மருந்து செய்விக்கலாம். யாழ்ப்பாணத்தில் மாத்திரம் வருடமொன்றுக்கு நடக்குந் திருவிழாவுக்கும் விளையாடுங் கூத்துகளுக்குஞ் செல்லுகிற பணத்தையெடுத்துப் பள்ளிக்கூடம்வைத்துப் படிப்பித்தால் எவ்வளவுபேரைப் படிப்பிக்கலாம். எத்தனை புத்தகங்களை அச்சுப்பதிப்பிக்கலாம். வேறும்எத்தனை சீர்திருத்தங்களைச் செய்யலாமென்று ஒரு மதிப்புப்போட்டுப் பாருங்கள்.

பிராமணருக்கு நயம்பண்ணிச் சிவசமயப் பள்ளிக்கூடங்களுக்கு உதவிசெய்துவருகிறதாக நான் கேள்விப்பட்ட ஒரு வாலிபனைக் கொஞ்சநாளைக்கு முன்னே நான் கண்டு, சிவசமயத்தையும் பிராமணருடைய நடையையும்பற்றி நமக்கிருக்கிற எண்ணம் என்னவென்று கேட்டபொழுது, அவர் சொன்னது, சிவசமயபோதகர்கள் தங்கள் மாணுக்கருக்குச் சுத்தசமயத்தையே போதிவிக்கிறார்கள். ஆனால் பிராமணருடைய செய்கிருத்தியங்களும் மற்றும் அவர்களுடைய ஆராதனைகளும் ஆசமமுறையாய் நடத்தப்படவில்லையென்று குற்றமாய்ப் பேசுகிறார்களென்றார். பிராமணருக்குள்ளே சன்மார்க்கமுமில்லை, அவர்கள் ஆராதனையிற் புண்ணியமுமில்லையென்று நான் இப்பொழுதுகாட்டிய நியாயங்களுக்கு அவர்சொன்னசாட்சி மெத்த உதவியாயிருக்கின்றது. ஆகையால் பிராமணருக்குத் தெட்சணை கொடுப்பதினாலும், கோவில்களுக்குத் தானதருமம் பண்ணுவதினாலும், சாதகம்முதலிய குறிப்புக்களை எழுதிக் கிரகபலாபலன் கணித்து உங்களை வஞ்சிக்கிற சாஸ்திரிமாருக்குப் பணங் கொடுப்பதினாலும் யாதொரு பலனில்லையென்று கல்வி அறிவுள்ள நீங்கள்தானே தள்ளிவிட்டு, ஊரைக்கெடுக்கும் இந்தக் குடிவெறியை விலக்கவும், கல்வியைப் பிரசித்தம் பண்ணவும், மனதுக்கு உண்மையையும் வெளிச்சத்தையுங் கொடுக்கக் கூடிய பத்திரிகைகளை அச்சுப்பதிப்பிக்கவும் பிரயெத்தனஞ்செய்வது அவசரமாயிருக்கின்றது. சிவசமயப்பள்ளிக்கூடங்களிலிருக்கின்ற மாணுக்கர் ஆகமசாத்திரங்களைப் படித்துவருகிறார்களோ? சொல்லுங்கள். நான் விசாரணைபண்ணி அறிந்தபடிக்கு, கடவுளானவர் வேதங்களைப் பிராமணருக்கு மாத்திரமே கையளித்திருக்கிறாரென்று சாத்திரஞ் சொல்லுகின்றது. அப்படியானால், வேதங்களைப் படிப்பிக்கிற உவாத்திமாரும் அவைகளைப்படிக்கிற மாணுக்கரும் பிராமணராயிருக்கவேண்டியதே. இப்படிப்பட்ட பள்ளிக்கூடத்தை நாங்கள் இன்னும் எங்கள் பகுதியிற் கண்டதில்லை. வண்ணார்பண்ணையிலும் வதிரியிலுமுள்ள சிவசமயப் பள்ளிக்கூடங்களிற் பிரதானமாய் வேளாளப் பிள்ளைகள் மாத்திரம் படிக்கிறபடியால் அவர்கள் வேதாகம சாஸ்திரங்களைப் படிக்கப் பிராமணர் இடங் கொடுக்கமாட்டார்கள். நாலுவேதங்களையும் படிப்பிக்கிற ஒரு பிராமணப்பள்ளிக்கூடம் இருக்குதென்று வைத்துக்கொள்ளுங்கள். பிராமணருக்குக் கீழான சத்திரிய வசிய சூத்திரரென்னும் மூன்று வருணத்தவர்களுக்கும் வேதங்களைக் காட்டப்படாதென்று கடவுள் தங்களுக்குக் கட்டாயமாய்ச்சொல்லப் பின்னை அந்த மூன்றுசாதியாருக்கும் அந்தப் பள்ளிக்கூடத்தினால் யாதொரு நயமுமில்லையே. ஐரோப்பைச் சாதியாரால் அச்சுப்பதித்துப் பிரசித்தம் பண்ணப்படாமலிருக்கிற யாதாமொருபகுதி இன்னும் அந்த நாலுவேதங்களிலுண்டென்று ஆருங் காட்டக் கூடுமா? நீங்கள் புகழ்ந்து வியந்துபேசுகிற வேதங்களைத் தெளிவுற அறிந்துணர்ந்த யாதொரு பிராமண

னுண்டா? கிறிஸ்தவர்கள் அனுசரிக்கும் வேதாகமத்திலொரு பகுதி மற்றொரு பகுதியோடே ஒத்திருக்கும்பிரகாரமாக உங்கள் நாலுவேதமும் ஒன்றுக்கொன்று இணங்கியிருக்குதா? நாலுவேதங்களையும்படித்து இங்கிலீஸ் பாஷையாக்கின உவில்சன்முதலிய கல்விமான்களிடத்திற் கேளுங்கள். நாலுவேதங்களைமாத்திரமல்ல, ஆறு சாஸ்திரங்களையும் ஆராய்ந்தறிந்த சிறீ. வில்லியம் சோன்ஸ் என்பவரெழுதிய புத்தகங்களைப் பாருங்கள். பிராமணர்கள் தங்கள் சமயத்துக்கு மூலைக்கல்லாயும் அத்திபாரமாயும் வைத்திருக்கிற அந்த வேதங்களின் உள்ளுறையை எங்கள் சுயதேசத்தவர்களாகிய இராமகன்றோய், பீதாம்பரசிங்கு, தாகோர்முதலிய கல்விமான்கள் அறியாமல் மோசம்போனார்களோவென்று நீங்கள்தானே தீர்மானம்பண்ணுங்கள்.

சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாய் இச்செலவு நாங்கள் தீவுக்குப் போயிருக்கையில் இரண்டொரு விசேஷங்களைக் கேள்விப்பட்டோம். அவைகளை வண்ணார்பண்ணையிலும் வதிரியிலுமுள்ள சிவசமயப் பள்ளிக்கூடத்தார் கேள்விப்பட்டதுண்டானால் அவர்கள் இந்தக் குடிவெறியைத் தடுக்கிறதற்குப் பிரயெத்தனம்பண்ணுகிறது எவ்வளவோ அவ்வளவாய் இந்த விக்கிரகாராதனையும் பிராமணருடைய கோட்பாடுகளையும் அகற்றுகிறதற்கு முயலுவார்களென்று நினைக்கிறேன். புங்குடுதீவுக்குச்சுமையெடுத்துக் கொண்டுபோகும்படி நாங்கள் பிடித்த ஒரு கூலிக்காரன் எங்களுக்குச் சொன்னதென்னவெனில், கோவிற்சுமங்களைப்பார்க்கிறஒருவன் தன்னுடைய பெண்சாதியை எத்தித் தந்தரமாய்க் கொண்டுபோய்விட்டானென்றும், தன்னுறவுமுறையாரும் அயலவர்களுங் கோவில்களுக்குக்கொடுத்த காணிபூமியின் வருமானத்தினாலே அவன் பணக்காரனாகாதிருந்தால் இவ்விதமாய் அவன் தன் பெண்சாதியை ஒருக்காலும் அவதூறுபண்ணமாட்டானென்றுஞ் சொன்னான். வேறொரு சமயத்திற் புழியங்கூடலென்ற குறிச்சிக்குப்போய் விக்கிரகாராதனைசெயவதினால் வருந்தீமைகளைப்பற்றிப் பேசினஇடத்தில் வெகுபெயர் சொன்னதென்னவெனில், தங்கள் குறிச்சியில் ஒரு கோவில்கட்டும்படி முயன்றதினாலே தங்களிற் சிலர் முட்டாளியாகிக் கடன்பட்டு வறியவர்களாய்ப் போய்விட்டார்களென்றார்கள். சரவணைக் குறிச்சியிற் கோவிற்பூசைபண்ணுகிற ஒரு பிராமணன் சொன்னதென்னவெனில், நான் உண்மையாய்த்தான் பேசுகிறேன். அஞ்ஞானிகள் திருவிழாக்களை ஏற்படுத்தின நோக்கந் தங்கள் சிற்றின்ப ஆசைகளை எழுப்புகிறதற்கும் அவைகளைத் தீர்க்கிறதற்குமேயல்லாமல் பின்னொரு முகாந்திரத்துக்காகவல்லவென்று நான்வெகுநாளாய்க் கண்டறிந்தகாரியம். கோவிற் பூசாசாரியும் காரியக்குருவேயல்லாமல் அவர் காரணக்குருவல்ல. சனங்களுடைய ஆத்துமத்தில் அவருக்குச் சற்றும் பரிதாபமென்ற தில்லை. எங்கள் சம்பளத்தை நோக்கி நாங்கள் அவருக்குஉதவிசெய்கிறோமேயல்லாமல் மற்றும்படி தேவநேசத்தை அல்லது மனிதநேசத்தை விரும்பியவர்களல்ல. நட்டுவர் ஊதுங் கீதவாத்தியங்களைக் கேட்கிறதற்கும் தாசிகளாடும் நடனங்களைப் பார்க்கிறதற்கும் வாலிபரும் வாலிப ஸ்திரிகளும் கோவிலுக்கு வருகிறதேயல்லாமல் அவர்கள் தேவனைக் கும்பிடும் முகாந்திரமாய் வருகிறதில்லையென்பது நான் நன்றாயறிந்தகாரியம். அப்படியே தலைமைக்காரரும் மற்றும் பிரபுக்களும் மார்க்கமென்றதை மனதில் வையாமல் தங்கள் உத்தியோக வலிமையைக் காட்டும் முகாந்திரமாகவே கோவிலுக்குவருகிறார்கள் என்றான். இதிலும் அதிகஞ் சாட்சிகள் தேள்வையானால், உதயதாரகை, ஞானோதயம் முதலிய பத்திரிகைகளை வாசித்தால் அஞ்ஞானிகளும் உரோமான்காரரும் முன்போலத் தங்கள் குருக்களையும் விக்கிரகங்களையும் கனம்பண்ணி வரவில்லையென்பதைத் திருட்டாந்தமாய்க் காண்பீர்கள்.

(இன்னும்வரும்.)

---

[The Arrack Rent and its Evils.]

## சாராயக்குத்தகையும் அதின் கேடும்.

ஓய்! பத்திராதிபதியே,—பலர் நன்மையைவிரும்பிய சில குருமார், துரைமார், பிரபுக்கள் முதலியவர்கள் முயற்சியால் பலவிடங்களிலுமேற்படுத்தப்பட்ட மதுபானவிலக்குச்சங்கம் எவ்வளவுநன்மையை உண்டாக்கிற்றென நீங்களே சாட்சியிட்டுவருகிறீர்கள். சென்றவருஷக் குத்தகையிலும் செல்லப்போகிறவருஷக்குத்தகை, ௰௫ம் இறைசால் குறையவிலைப்பட்டதும், குறித்த சங்கத்தாலானபலனைக் காட்டிற்றே. காரியமிப்படியிருந்தும் அரசாட்சியின் சிலபல தலைமைக்காரருடைய அசண்டையால் ஊருக்குண்டானகேட்டைக் கேள்விப்படுவது மேற்குறித்த புண்ணிய மகத்துக்களுக்கேற்படியிருக்குமோவென ஐயப்படுகிறேன். சென்றவருஷக் குத்தகைமுடிவதால் கைவசமிருந்த சாராயத்தால் நட்டமடையாமலும் "மதுபானவிலக்குச்சங்கத்தால்" வந்த நட்டத்தை நிரப்பவுங் குத்தகைகாரனின்துராலோசனை நன்றாய்ப்பலித்தது. சாராயம்விற்கும்படி. அரசாட்சியார் நியமித்தவிலை கலன் ஒன்றுக்கு, சிலின் ௪. குத்தகைகாரன்தற்காலம்மட்டும் விற்றதும் அப்படியே. இன்னாட்களிலோ, கலன் ஒன்றுக்கு ஒருசிலின்துவக்கம் இரண்டுசிலின்மட்டும் விலைப்படுகின்றது. குடிகாரரோ தாலிவாளியுமடைவுவைத்து இரவும்பகலுமாய்வாங்கிச் சேகரிக்கிறார்கள். இத்தாலுண்டாகுங் கேடோ ஆத்துமசரீரநாசம், பொருட்சேதம், சமாதானமின்மை, சண்டை, ஏச்சுப்பேச்சுமுதலிய பாதகங்களே. இந்தக் கேட்டை விலக்க யாதொரு தலைமைக்காரர் முயன்றதுமில்லை, முயற்சிப்படுத்தினதுமில்லை. எலிவாழ்ந்தாலென்ன? பூனைகைம்பெண்ணிருந்தாலென்ன! ஊரவர்கள் சமாதானமாயிருப்பது தலைமைக்காரருக்கு நட்டம், பொருட்குறைவு. சண்டைசள்ளு உண்டுபட்டாலோ "ஆர்குடிகெட்டாலும் நீ குடிமிளகுசாறு" என்று தலைமைக்காரர் பணம்பறிப்பார்கள். ஆ! இதென்ன கேடு, எவ்வளவு பரதாபம், ஊர்நன்மையை விரும்பாதவர்கள் பணமேதேவனெனப் பாடுபடும் பசாசுகள். கல்வி, ஞானமில்லாத மிருகங்கள் நம்மைச் சமாதானத்திற் காக்கக்கூடுமா? வாசிப்பவர்களே! கேளுங்கள், இவர்கள்தான் சமாதானத்தைக் காத்து நன்மையைப் பிறப்பித்து ஊரைச் செழிப்பிப்பவர்கள். வேலிபயிரையழித்தால் விளைவுண்டோ? இவைகளைக்குறித்துப் பேசுகில் இன்னுமெவ்வளவு சொல்லலாம். தாரகையிடங்கொடாதென்று பயப்படுகிறேன்.

இப்படிக்கு, சந்தியா அந்தோ.

---

# உதயதாரகை.

௲௮௱௫௨ ௵. ஆடி ௴. ௮ந். ௨.

[The Printing Press.]

## அச்சுச்சூத்திரம்.

இப்பொழுது அமேரிக்காக் கண்டத்தில் நூதனவிகற்பமான ஓர் அச்சுச்சூத்திரமுண்டு. அதின் நீளம், ௨௨. முழம், உயரங் கிட்டத்தட்ட, ௰. முழம், அகலம், ௪. முழம். அதற்கு நடுவிலே ஒரு பெரிய திரண்ட குழலுண்டு. அதிலே எழுத்துக்கள் சேர்த்திறுக்கப்பட்டிருக்கும். அந்தக் குழலைச் சுற்றிச் சற்றே தூரத்திற் பின்னும் எட்டுச் சிறுக் குழல்களுண்டு. அந்த எட்டுக்குழலுக்கும் எட்டுப்பேர் நின்று கடுதாசி போட்டுக்கொண்டு நிற்க, அந்தப் பெரியகுழல் ஒவ்வொருமுறையுஞ் சுற்றிச்சுற்றிவரஎட்டுத்தாழிலும் அச்சுப்பதியுது. கடுதாசி போட்டுக்கொண்டுநிற்கிற எட்டுப்பேருடைய சாமார்த்தியம் எவ்வளவோ அதற்குத்தக்கதாய் அந்தச் சூத்திரமும் அடித்துக்கொண்டே நிற்கும். ஒருவன் மணித்தியாலமொன்றுக்கு, ௨௲௫௱. தாள் வீதமாக எட்டுப்பேரும் போட்டால், ௰௲. தாள் பதிபட்டுப்போம்.

அச்சுச் சூத்திரத்துக்குள்ள பெலனைச் சற்றே யோசித்துப் பாருங்கள். எங்கே பார்த்தாலும் அதே சீர்திருத்துஞ் சூத்திரக்கருவி. அதின் தத்துவமும் பலனும் நாளுக்குநாள் ஓங்கி வளரக் காண்கிறோம். இந்துதேசத்திற் பார்த்தாலும் அதின் பெலன் அளவிடக்கூடியதாயிருக்கவில்லை. கற்குத்தா, வம்பாய், சென்னபட்டினம் முதலிய வடதேசங்களில் இஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அச்சுச் சூத்திரங்கள் தானும் ஞானப்பிரகாசத்தையுஞ் சத்தியத்தையும் பரப்புகிறதில்முயன்றிருப்பதால் அதுநன்மைசெய்புங்கருவியென்றுபெயர்ப்படத்தகுமே. ஆனாலும், கிறிஸ்துமார்க்கத்துக்கு விரோதமுஞ் சன்மார்க்க நெறிக்குத் தவறுமான நூல்களையுஞ் சனங்களுடைய உத்தமபலன்களைக் கெடுக்கிறதற்கேதுவான சங்கதிகளையும் பிரசித்தம்பண்ணுகிறதற்கு அதைநடப்பிக்கிறவர்கள் இடங்கொடுப்பார்களானால் தீமைசெய்கிற மற்றெல்லாக் கருவிகளிலும் இதே பெரிது.

இப்பொழுது எங்கும்வழக்கமாய்க் கையாலே இழுத்துப்பதிக்கிற சூத்திரங்களுக்கும், ஒரு மணித்தியாலத்துக்குள்ளே, ௰௲. தாள் அச்சுப்பதிக்குதென்று சொல்லப்பட்ட இச்சூத்திரத்திற்குமுள்ள தன்மையின் வித்தியாசத்தைப் பாருங்கள். கையாலே பதிக்குஞ் சூத்திரத்தைத்தானும் இவ்வூரவர்கள் பார்க்கும்படி வந்துகண்டு இது பெரிய புதினமென்று பேசினதை நாங்கள் கவனித்திருக்கிறோம். தீர்க்கமாய்ப் பழகின ஒரு ஏரோப்பையன் இப்படிப்பட்ட சூத்திரத்திலே நாளொன்றுக்குப் பத்துமணித்தியாலம் வேலைசெய்கிறதாக வைத்துப் பார்த்தால் ஒருமணித்தியாலத்துக்கு ஏறக்குறைய, ௨௱௫௰. தாளாகப் பத்துமணித்தியாலத்துக்கும், ௨௲௫௱. தாளுக்குப் பதிப்பான். ஆனாலும் இவ்வூரவர்களோ அதில் அரைவாசி மாத்திரம் முகிப்பார்கள். இவ்விதமாகக் கணக்கு வைத்துக்கொண்டு, பரும்படியான, ௱௬௰. சூத்திரங்களில் ஒருமணித்தியாலத்துக்கு, ௱௬௰. பெயர்நின்று செய்கிறவேலையும், மேற்சொல்லப்பட்ட நூதனமான சூத்திரத்தில் எட்டுப்பேர் மாத்திரம் நின்று ஒருமணித்தியாலமளவுக்குச் செய்கிறவேலையுஞ் சரியாயிருக்கும். என்ன, நூற்றறுபதுபேர் அல்லது மைப்போடுகிறவனுடனேகூட முன்னூற்றிருபதுபெயர் ஒருவளத்திலே நின்று நூற்றறுபது சூத்திரத்தில் செய்கிற வேலையும், அதற்குநேரே மற்றவளத்தில் எட்டுப்பெயர்மாத்திரம்நின்று ஒரு சூத்திரத்திலே செய்கிற வேலையுஞ்சரிவர இருக்குமேயானால். இதைவிட அதிசயமுண்டோ?

அறுநூறு எழுத்துக்காரருடைய வேலையைப் பரும்படியான ஒரு சூத்திரந்தானே லெத்துவாய் நடத்திக்கொள்ளக்கூடும். இப்படிப்பட்ட ஒரு சூத்திரமில்லாத காரணத்தினால், ௬௱. வருடக்காலத்துக்கு முன் புத்தகங்கள் கையினாலே எழுதப்பட்டு வீண்போன நேரம் இப்பொழுது அச்சுச் சூத்திரம் வந்ததினால் அதிகம் நயமாயிற்றே. அல்லாமலும், ௬௱. பெயர் எழுதுகிறதும், ஒரு பரும்படியான அச்சுச்சூத்திரத்தில் அச்சுப்பதிக்கிறதுஞ் சரியாயிருக்குமேயானால், மேற்சொல்லப்பட்ட நூதனமான சூத்திரம் முகிக்கிற வேலையளவு செய்துசரிக்கட்ட ஒரு இலட்சம் எழுத்துக்காரர் தேள்வையாயிருக்கும். நல்ல செதியாய் எழுதக்கூடியவன் ஒருமணித்தியாலத்திலே ஏறக்குறைய, ௨௲௫௱. சொற்களை எழுதுவானென்றும், நல்ல செதியாய்ப் பேசக்கூடியவன், ௰௲. சொற்களைப் பேசுவானென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனாலும், இந்த நூதனமான அச்சுச் சூத்திரத்தில் ஒரு நிமிஷத்துக்கு ஒருகோடி சொற்களாக ஒருமணித்தியாலத்துக்கு அறுபது கோடி சொற்களைப் பதிக்கக்கூடும். இதுதான் ஆச்சரியம்!

சிநேகிதரே, நாங்கள் சீவிக்குங் காலத்திலுண்டான சீர்திருத்தங்களில் இதே ஒன்று. இத்துடனே புகையினால் இயக்கப்பட்டு இருப்புச்சலாகை பாவிய வீதியிலோடும் இரதங்களினாலும், புகைக் கப்பல்களினாலும், மின்தாதுகாந்தம் ஊட்டிய கம்பிவழியாய்ப் புதினசங்கதிகளை அறிவிக்குஞ் சூத்திரங்களினாலும் உண்டாகிய அதிசயங்களைப் பாருங்கள். ஆதலால் இப்படிப்பட்டதேறுதலின் காலத்திலிருக்கிறது பெரிய சலாக்கியம்.

---

[Ocular Astronomy.]

## கிரகசாரவிளக்கம். ௯.

இந்தமாதம் ௰௧ந் தேதி. காலமே, ௰௧ இ. மணிநேரத்தில் புதனும், சுக்கிரனும் கற்கடகராசியில் ஒரே கூட்டமாய் நிற்கும். அன்று சாயந்தரம் மந்தாரமில்லாதிருக்கில் இவ்விரண்டையும் மேற்கடிவானத்திற் காணலாம். சுக்கிரனுக்கு வடக்காய், ௫, ௬. பாகைதூரத்திலேபுதன் காணப்படும். மாலைவெள்ளியாயுதித்த சுக்கிரன் இனி மறைந்துபோக இந்தப் புதன், ௫, ௬. கிழமைவரைக்கும் மாலைவெள்ளியாய்த்தோற்றும். அல்லாமலும்இந்தப் புதன் சிங்கராசியில் கொஞ்சங்குறைய முழுமையும் உலாவிப் பின்பு வக்கரித்துப்போகிறபடியால் அதை நாம் கவனித்து அதின் கதியை அறிந்துகொள்ள இதுவே ஒரு நற்சமையமென்றெண்ணுகிறோம். மேலும், ௰௮. ௨, சந்திரனுக்குத் தெற்கே, ௨. பாகை தூரத்தில் இலேசாய் அதை மட்டிட்டறிந்துகொள்ளலாம். இன்னும் ௨௬. தேதி சிங்கராசியிற்றானே அருக்கன் செல்லும் வீதிக்குச் சமீபமாய்த் தோற்றும் முதற்றரப்பருப்பமுள்ளதாகிய மகமென்னும் நட்சத்திரத்திற்கு மிகவும் கிட்டுமானமாய் அந்தப் புதனை நாம் கண்டுகொள்ளலாம்.

இற்றைக்கேறக்குறைய, ௱௰. வருடத்திற்குமுன்னே இவ்விடத்திலேயும் மதுரைப்பட்டினத்திலேயும் இருந்த சோதிடசாத்திரத்தை அறிந்தவர்கள் இந்தப் புதனை நாங்கள் கலியுகத்தில் காண்பது அரிதென்று சொல்லிவந்தார்கள். ஆனால் இப்பொழுதோ பள்ளிக்கூடங்களிற் படிக்கும் சிறுபிள்ளைகளும் அதின் நிலையையும் அது செல்லுங் கதியையும் கண்டு அறிந்துகொள்ளக்கூடியதாயிருக்கிறது.

---

லாகோர்.—இவ்விடத்திலே தாகோசித்தரென்னுங் கள்ளர்கள் கனகூட்டமாகக் கூடியிருக்கிறார்களென்று தெரியவந்ததினால், ஒரு கூட்டத்தில்மாத்திரம் முன்னூற்றிருபதுபேரிருக்கக்கண்டு அவர்களில் நூற்றிருபதுபேரைப் பிடித்து மறியற் படுத்தினபொழுது அவர்களில் அனேகம்பேர் தங்கள் கொடுமைகளை வெளியரங்கமாக அறிக்கையிட்டதுமன்றித் தாங்கள் முறைக்குமுறை பிடித்துக்கொன்ற ஆட்கள் புதைக்கப்பட்ட இடத்தையுங் காட்டினார்கள். அப்போ அவர்களுடைய எலும்புகள் வெளியே கிளறி எடுக்கப்பட்டன.

# MORNING STAR.

## Jaffna, Thursday, July 8, 1852.

CHILD STEALING IN ROME.—A correspondent of the New York Observer, writing from Rome, under date of March 23, 1852, gives the following astonishing fact. It is a mystery to us, when the whole history of popery is so full of the most glaring wickedness and diabolical atrocities, that so many professedly Protestant people have such a desire to imitate the forms and ceremonies and heartless mummeries of the Church of Rome, that "mother of harlots" and all abominations.

A day or two since, a lad, the son of an American artist—the well-known *illustrator* of Harper's illustrated Bible—was missing. The domestic, a most devout Catholic, protested her ignorance of his whereabouts. The lad's little brother was called, and, in his innocence remarked that he guessed he was at the convent. This was the first intimation the parents had that their children had ever visited a convent.

They then sent for Hon. Mr. Cass, (American Consul at Rome) who took the boy with him, and went, in his ordinary dress to the convent. The manner in which the inmates gathered round and welcomed the boy, convinced Mr. Cass, that the boy had often been there, and led him to believe that the brother would be found there. He inquired for him, but the Superior stoutly affirmed that he was not in the convent. Mr. Cass requested to be shown through the establishment. His request was granted, but no boy was found. Mr. C. then noticed a passage leading to another building, or another part of the building. He insisted on being conducted thither. Hearing a noise in a room as he passed along, he opened a door, and found a priest or two at table, and a seat just vacated. He insisted that it was the seat of the lost boy. The priest denied it. Mr. Cass then made himself known as the Representative of the United States, and pretty distinctly intimated that some of Jonathan's thunder would be put in requisition if the boy was not forthcoming immediately. The boy was then brought forth from an adjoining room, and restored by Mr. Cass to the anxious parents.

A MOST INTERESTING FACT.—We extract the following statement from the Colombo Observer of the 24th ult. Thirty-two taverns were abolished last year, so that with the twenty-eight, now abolished, sixty fountains of corruption and ruin have been done away with in two years. May God speed and bless the cause of temperance more and more.

We rejoice to learn that the Governor has this year done away with 28 more taverns, so that since he went to the Central Province the number has been reduced one half. The principle which has been followed is that wherever it has been shewn that a tavern is a public nuisance it should be abolished. Some of these done away with, have been of the very worst description. In the neighborhood of one of them several assaults and robberies were committed and poor Morgan was shot. Another of them was not far from the village of Gahalagambada where the inhabitants have long been notorious for their degraded condition—a large proportion of the men being cattle stealers and the women common prostitutes. One man at different times had lost 16 cattle, another 19, and a third received a large gash on his head when endeavoring to protect his property from theives.

NICARAGUA.—A correspondent of the New York Independent, writing from Nicaragua, Central America, thus speaks of the results of Romanism in that land:

Among all her sins, Rome has much to answer for here. She has set her foot on the neck of this people, and for long centuries kept them prostrate in the very dust. She has taught them through her priests to be licentious, to give themselves over to every base passion of the heart; she has withheld from them education, which only can make freedom a blessing; she has gathered up all the wealth of the country, into her lap, and but for the bounty of the Creator would have left the people to starve. And in return she has given them only superstition, and feast-days and fast-days—and in this way even contrived to rob them of almost half their time. Such, in brief, is what Rome has done in this country; and if ever prosperity blesses it, her reign must be broken, and the leaden scepter she has swayed over the energies of the people must be exchanged. God grant that that day may not be far off.

KANDY.—We are glad to learn from the Colombo Observer that the Kandian chiefs have recently petitioned His Excellency, Sir Geo. Anderson, for the enaction of a law to prevent the evils which arise among the Kandians, in consequence of the loose state of morals existing in regard to marriage. It seems that by the customs now considered as the law regulating the marriage contract, not only are polygamy and polyandry tolerated and recognized, but a contract considered so solemn and important by all other nations is rendered a matter of no moment. We earnestly hope an efficient law may be enacted which will meet the case.

BURMESE WAR—TAKING OF BASSEIN.—The number of the English troops engaged in the taking of Bassein was only about 800, while the Burmese works were defended, it is said, by nearly 7000 men. We give the main features of the expedition as below, from the Friend of India of June 10th:

By four o'clock in the afternoon of the 19th May, the steamers were ranged opposite the fortifications of Bassein, having accomplished a voyage of sixty miles, without a pilot, up an unknown river, lined with stockades, without an accident, and without a shot having been fired. The chief defences of the place consisted of a great "golden pagoda," and a mud fort, run up in haste, but constructed with great attention to scientific principles. Major Errington led his soldiers to the attack, and the pagoda was carried. The mud fort on the left was next attacked. The Burmese who had collected their best men at this point, made a desperate resistance, the gunners being bayonetted where they stood, but the place was quickly carried with a loss of 800 men to the enemy, and several officers and men wounded on the side of the British. The Burmese immediately evacuated the town, and thus fell Bassein, once the centre of the Portuguese power in Eastern India, and declared by Sir A. Campbell to be the key of the Burmese empire. A garrison of about five hundred men were left in possession of the town, and the armament returned to Rangoon.

PEACHES.—The editor of the Colombo Observer has been favored with a "couple dozen fine blooming downy peaches," which were grown in Upper Hewahette, at an altitude of 4,500 feet, where the mercury frequently sinks below 60°. Trees at this place, from seed obtained at Calcutta in 1845, have "stems as thick as a man's body, and branches so loaded with fruit that a bushel can be gathered in a day." Such a fact as this existing in the tropics is almost or quite enough to make our mouths water—those of us who were born in a temperate clime and who in our younger days were accustomed to the taste of that most delicious fruit, the peach.

SCREW STEAM COMPANY.—We are sorry to see that the company managing the new line of screw steamers around the Cape, have adopted so high a rate of passage, it being nearly or quite equal to the overland route, while the time occupied will be twice as long. We are sorry to see also that this company are so far behind the spirit of the age as to compel those who have been redeemed from the slavery of appetite, to virtually pay for intoxicating drinks that others may be led captive and ensnared by a depraved and unnatural desire for alcoholic stimulants.

PROGRESS.—As an indication of progress, and as an encouragement to temperance men, we have the pleasure to state, on the authority of the Colombo Observer, that "notwithstanding every exertion on the part of Government to secure competition the arrack farm has fallen considerably. In 1850 it realized £19,805, in 1851 it sold for £16,275, while this year it fetched only £13,275. It has therefore fallen one-third during the last two years."

## AN ADDRESS TO EDUCATED YOUNG MEN.

FELLOW COUNTRYMEN:—A temperance society was first formed at Batticotta, November 30, 1847. The object was then considered by some as a trifling one. As I was then secretary of the society, many of the younger students spoke to me, "Why do the leaders at the station consume our time, which we should devote to other important duties? The subject should arrest only the attention of the drunkard." Thus in various ways the object of the meeting was discouraged. However the society continues up to the present time, and is a parent society to all others which have since been formed in our district.

When our society heard that Mr. John Murdock of Kandy, and Dr. Elliot of Colombo, were advancing the temperance cause in the south, it was deemed necessary that the cause should be advanced throughout the northern province. Accordingly the society, on the 16th of September, 1851, selected a headman, a schoolmaster and myself as a committee to suggest ways and means to extend the cause of temperance throughout the Jaffna province. Among other suggestions, the committee chose ten different localities at which they thought to carry on their operations, and forwarded a circular, sanctioned by the society, to different stations, requesting the leaders and headmen thereof that they would do their best in extending the temperance cause. When the leaders of these different stations received our circular, things for some time appeared unpromising, but to the great astonishment of many, not only the localities which we have chosen, but in other places also, are seen permanent temperance organizations with a crowd of people signing the temperance pledge—a thing unexpected at the time of this little beginning at Batticotta.

